Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (14-2-66) இதழ் 6

மாசி 3 ஷவ்வால பிறை 22 திங்கட்கிழமை

★ அழகிற்கு அஸ்திவாரம்
★ உறுதிக்கு உத்தரவாதம்
★ உண்மைக்கு உறைவிடம்

A AKS S

நகை மாளிகை

கன்னுதிட்டி — யாழ்ப்பாணம்

போன்: 519

### கல்யாண பயம்

சலர்னோ, பெப். 13

இத்தாலிய மாப்பிள்ளை ஒருவர் தேவாலயத்தில் திருமணம் நடைபெறுவதற்கு சிறிது நேரத்துக்கு முன் தேவாலயத்தை விட்டு ஓடிச்சென்றார். இதனால் மணமகள் மயக்கமுற்றார் பின்னர் மணமகனின் உறவினர்கள் அண்டோனியோ என்ற அந்தமாப்பிள்ளையை ஒருவாறு சமாதானப்படுத்தியபின் திருமணத்தை நடத்திவைத்தனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

# கலைப்பிரிவு மாணவர் தொகை குறையும்

## சர்வகலாசாலை இடநெருக்கடி குறைய கமிஷன் யோசனை

கொழும்பு, ஞாயிறு

சர்வகலாசாலையில் இடநெருக்கடியை நீக்குவதற்கு சர்வகலாசாலை தனிநபர் கமிஷன் தமது அறிக்கையில் சில யோசனைகளைத் தெரிவித்திருக்கிறது.

பேராதனைச் சர்வகலாசாலையில் கல்விகற்பதற்கு ஐயாயிரம் மாணவர்களுக்கு மேல் தெரிவு செய்யப்படக்கூடாதென்று அந்த அறிக்கை கூறுகிறது. இப்பொழுது ஏழாயிரம் மாணவர்கள் அங்கு உள்ளனர். கலைப்பிரிவு மாணவர்களின் தொகையைக் குறைப்பதுடன் அவர்களது போதனைப் பயிற்சிக் காலத்தையும் குறைக்கவேண்டுமென்றும்சிபார்சு செய்திருக்கிறது.

லண்டன் சர்வகலாசாலை பரீட்சை எடுப்பதற்கு இலங்கை மாணவர்களை மீண்டும் அனுமதிக்கவேண்டுமென்றும் கமிஷன் யோசனை தெரிவித்திருக்கிறது.

## ‘சதி’பற்றி விசாரணை

பம்பலப்பிட்டி, ஞாயிறு

தேசியமய சேவைகள் மந்திரி திரு. வி. ஏ. சுகததாஸாவைக் கொலைசெய்ய நடைபெற்றதாகச் சந்தேகிக்கப்படும் சதி சம்பந்தமாக பொலிஸார் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர்.

இது சம்பந்தமாக ஏற்கனவே நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## ஜெனரல் நீ வின் அனுராதபுரம் விஜயம்

அனுராதபுரம், திங்கள்

பர்மிய அரசாங்கத் தலைவர் ஜெனரல் நீவின் கோஷ்டியினர் இன்று திங்கட்கிழமை அனுராதபுரத்துக்கும் கல்லோயாப் பள்ளத்தாக்குக்கும் விஜயம்செய்வார்கள். இந்த விஜயங்களுடன் இவர்களது சுற்றுப் பிரயாணம் முடிகிறது.

அனுராதபுரத்துக்கு முதலில் விஜயம்செய்யும் இவர்கள் பின்னர் இங்கிருந்து விமான மார்க்கமாக கல்லோயாப் பள்ளத்தாக்குக் குச் செல்வார்கள்.

நாளை செவ்வாய்க்கிழமை கொழும்பு திரும்புவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதன்கிழமை பிரதமர் டட்லி சேனநாயகாவுக்கும் ஜெனரல் நீவினுக்குமிடையே இரண்டாம் தடவையாகப் பேச்சுக்கள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இரு தலைவர்களும் சேர்ந்து கூட்டறிக்கை வெளியிடுவர்.

வரட்சி

## நிவாரண உதவி நிறுத்தப்படும்

காங்கேசன்துறை, ஞாயிறு

கிளிநொச்சி, பூநகரி, துணுக்காய், பளை ஆகிய இடங்களில் இதுவரைகாலமும் அரசாங்கத்தினரால் அளிக்கப்பட்டுவந்த நிவாரண உதவி மிகவிரைவில் நிறுத்தப்படவிருக்கிறது.

இங்கு நிலவிவந்த வரட்சி காரணமாக மக்கள் விவசாயம் செய்யமுடியாது மிகவும் கஷ்டமுற்றதன் காரணத்தினாலேயே இவர்களுக்கு இந்த உதவி காரியாதிகாரி பிரிவுகளில் வழங்கப்பட்டு வந்தது.

தற்போது இப்பகுதிகளில் போதிய மழை பெய்து நெற்பயிர்ச்செய்கை செய்யப்பட்டுள்ளதாலேயே இவ்விதம் நிவாரண உதவி நிறுத்தப்படவிருப்பதாக அறியப்படுகிறது.

## ரஷ்யாவின் அணுசோதனை?

லண்டன், பெப் 13

ரஷ்யாவின் மத்திய பகுதியில் நிலத்துக்குக் கீழே அணு ஆயுத சோதனை நடைபெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அணுசோதனை பெரும் அளவில் நடைபெற்றதாகச்செய்திகள் கூறுகின்றன.

## தடைசெய்தும் பொருள் கிடைக்கும்

கொழும்பு, ஞாயிறு

இறக்குமதிக்கு தடைவிதிக்கப்பட்ட பொருள்கள் இன்னமும் இலங்கையில் கிடைக்கக்கூடியதாக இருப்பதாகவும், சுங்கப்பகுதினரால் கைப்பற்றப்பட்டு ஏலத்தில் இப்பொருள்கள் விற்கப்படும் பொழுது வர்த்தகர்கள் தங்கள் கையாட்களை வைத்து மீண்டும் அப்பொருள்களை வாங்கிவிடுவதாகவும் கூறப்படுகிறது.

## மாணவ தாதிமாருக்கு மனோவைத்தியத்தில் பயிற்சி

பம்பலப்பிட்டி, ஞாயிறு

நோயாளரைச் சரியாகப் புரிந்துகொள்வதற்காக மாணவ தாதிமார்களுக்கு மனோவைத்தியத்தில் பயிற்சியளிக்கப்படவிருக்கிறது.

இத்திட்டம் உடனடியாக ஆரம்பிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள மாணவ தாதிமாருக்கு மனோவைத்தியத்தில் இப்பொழுது விரிவுரை மூலம் போதனை நடைபெற்றுவருகிறது

புதிய திட்டத்தின் கீழ் மாணவ தாதிமார்களுக்கு ஐந்துமாத கால பயிற்சியளிக்கப்படுமென்றும் இப்பயிற்சிகள் கொழும்பில் மட்டுமின்றி வெளியிடங்களிலும் நடைபெறுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மாணவ தாதிமார்களுக்கு மனோவைத்தியத்தில் பயிற்சியளிப்பதற்காக ஆஸ்பத்திரிகள் நிறுவப்படவிருக்கின்றன.

## ஹம்ப்ரி

பாங்ஹாக், பெப். 13

அமெரிக்க உபஜனாதிபதி ஹம்ப்ரி இன்று பாங்ஹாக் வந்து சேர்ந்தார். தாய்லாந்தில் அவர் இரண்டு தினங்கள் தங்கியிருப்பார்.

## ஹஜ் யாத்திரிகர் புறப்பட்டனர்

கொழும்பு, வெள்ளி

‘லாவோஸ்’ என்ற கப்பலில் இலங்கையிலிருந்து 108 இஸ்லாமியர்கள் இன்று ஹஜ் யாத்திரைக்குப் புறப்பட்டனர். இதற்கு முன்னர் மருதானை ஜும்மா பள்ளிவாசலில் விசேஷ தொழுகை நடைபெற்றது.

## இவ்வாண்டு பஞ்சம் ஏற்படும் அபாயம் இல்லை

### இந்திய உணவுமந்திரி சுப்ரமண்யம் நம்பிக்கை

புதுடில்லி, பெப். 13

பாரதத்தில் இவ்வாண்டு பஞ்சம் ஏற்படும் அபாயம் இல்லையென உணவுமந்திரி திரு. சுப்ரமண்யம் இங்கு கூறினார்.

ஆனால் ஜூன், ஜூலை மாதங்களில் உணவுவிஷயத்தில் பற்றாக்குறை இருக்கும் என அவர் கூறினார்.

டாஷ்கண்ட் ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா—பாகிஸ்தான் வர்த்தக உறவு மாமூலுக்கு வந்தபின் பாகிஸ்தானிலிருந்து அரிசி கிடைக்கும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். அதேசமயம் மேற்கு பாகிஸ்தானில் கடந்த 5 மாதகடும் வரட்சிக்குப்பின் பலத்த மழை பெய்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. 10 லட்சம் டன் உணவுப் பொருட்களை அனுப்புமாறு பாகிஸ்தான் அமெரிக்காவிடம் கோரியிருக்கிறது.

நேற்று ஜய்ப்பூரில் பேசிய பிரதமமந்திரி ஸ்ரீமதி இந்திராகாந்தி வறுமை பசிக்கொடுமையை எதிர்த்துப் போராடுமாறு 3000 காங்கிரஸ் பிரதிநிதிகளிடம்கேட்டுக்கொண்டார்.

திரு. காமராஜ் பேசியபோது. டாம்பீக பொருட்களின் உற்பத்தியை கட்டுப்படுத்தவேண்டும் என்றும், பாவனைப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

ஒருவாரத்தில்

## 70,000 தொன் இறக்குமதி

பம்பலப்பிட்டி, ஞாயிறு

நேற்றுடன் முடிந்த ஒரு வாரகாலத்தில் கொழும்புத் துறைமுகத்தில் 70,000 தொன் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் 20,000 தொன் சீனி, மாவு, அரிசியும், 35,000 தொன் பொதுப் பொருள்களும் அடங்கும். [illegible] டன.

## மற்றுமொரு தொழிற்சங்கமா?

யாழ்ப்பாணம். திங்.

அரசாங்க பொதுசேவைத் தொழிலாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் விசேஷ பொதுக் கூட்டமொன்று அண்மையில் தலைவர் கே. செல்லத்துரையின் தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:-

“தாய்ச் சங்கநிர்வாகிகள் சிலர் 8-1-66-ல் சங்க அனுமதியின்றி வேலை நிறுத்தத்தில் பங்குபற்றியமையால் யாழ்ப்பாணக் கிளை தாய்ச் சங்கத்தில் நம்பிக்கை இழந்துவிட்டனர். எதிர்வரும் 11-3-66-ந் திகதிக்கு முன் பொதுச் சபையைக் கூட்டி தாய்ச்சங்கத்தின் பிழையான போக்கிற்கு மன்னிப்புக் கோராத பட்சத்தில் அகில இலங்கை ரீதியில் இன்னுமோர் தொழிற் சங்கம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தாய்ச் சங்கத்திற்கு வற்புறுத்திக் கூறுகிறோம்”.

இக்கூட்டத்திற்கு மட்டக்களப்பு, ஆனையிறவு, பலாலி, ஆகிய இடங்களிலிருந்து ஏனைய கிளை அங்கத்தவர்கள் சமுகமளித்திருந்தனர். ஏனைய மாவட்டங்கள் அமைப்பில் அங்கு சென்று பிரசாரம் செய்யவென ஏழு அங்கத்தவர்களைக் கொண்ட ஓர் குழுவும் நியமிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

சமூகத்தில் மிகப் பலவீனமானவர்க்கும்மிகச் செல்வாக்குப் பலமுள்ளவரைப்போல் சமசந்தர்ப்பங்களிலிருக்கவேண்டும். அதுவே ஜனநாயகத்தைப் பற்றிய எனது கருத்து. அதில் மிகத் தாழ்ந்தவரும் தமக்குச் சுதந்திரமும் சமநீதியுமிருப்பதாக உணர்வதாக இருக்கவேண்டும்.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

EELA NADU; National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna Phone: 287

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு மாசி மீ 3 உ (14-2-66)


## அரசியல் அமைப்பில அடிப்படை உரிமை

இலங்கைக்குப் புதிய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு, பார்லிமெண்டின் இரு சபைகளையும் கொண்ட தெரிவுக்குழு ஒன்றை நியமிக்கக் கோரும் பிரேரணையைத் தயாரிப்பதற்காக, அரசியல் கட்சிகளின் தலைவர்கள் நாளை கூடி ஆராயவிருக்கிறார்கள்.

அரசியல் அமைப்பைத் திருத்த வேண்டுமென்ற யோசனை பற்றியும், புதிய அரசியல் அமைப்பை உருவாக்க வேண்டுமென்ற யோசனைபற்றியும் நாம் ஏற்கெனவே இப்பத்தியில் பொதுவான சில கருத்துக்களைத் தெரிவித்திருந்தோம். இலங்கையை ஒரு குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்த வேண்டுமென்பதிலோ, செனட்சபையின் எதிர்காலம், ஜனப்பிரதிநிதிகள் சபையிலுள்ள நியமன அங்கத்தவர்களின் நிலை, அரசாங்க சேவைக்கமிஷன், நீதியரிபாலனசபைக் கமிஷன் ஆகியவைகளின் நிலைபற்றியோ அரசியல் கட்சிகளுக்கிடையில் கருத்து வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை ஆனால அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கும் ஷரத்து அரசியலமைப்புத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதில் தான் கருத்துவேறுபாடு நிலவுவதாகத் தெரிகிறது.

இலங்கையின் இப்போதைய அரசியல் அமைப்பில் சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு பாதுகாப்பளிப்பதற்காக 29-வது ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த 29-வது ஷரத்து இந்நாட்டிலுள்ள சிறுபான்மை இனத்தவரின் உரிமைகளுக்குப் போதிய பாதுகாப்பளித்திருக்கிறதா என்பது சிந்திக்கவேண்டிய விஷயம் கடந்தகாலச் சம்பவங்களிலிருந்து இந்த ஷரத்து போதிய பாதுகாப்பளிக்கவில்லை என்பது தெளிவு. என்றாலும் இந்த ஷரத்தையே அரசியல் அமைப்பிலிருந்து நீக்கிவிடவேண்டுமென்றும்சில அரசியல் கட்சிகள் கருதுகின்றன. இதேசமயம் புதிய அரசியல் சாஸனத்தில் அடிப்படைஉரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கும் ஷரத்துக்கள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற யோசனையையும், சில அரசியல் கட்சிகள் எதிர்க்கின்றன. இதற்கு அரசியல் காரணங்களும் நோக்கங்களும் காரணமாக இருக்கலாம். என்றாலும் நாட்டின் அரசியல் அமைப்பை புதிதாக உருவாக்கும்பொழுது தங்கள் கட்சியின் வளர்ச்சியையும் வெற்றியையும் பற்றிச் சிந்திப்பதைவிடுத்து நாட்டின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திப்பதுதான் அரசியல் ஞானமாகும். அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கவேண்டுமென்றதும் அது சிறுபான்மையினருக்கே பாதுகாப்பளிக்கும் ஷரத்து என்றுசிலர் தவறான கருத்துக் கொள்கின்றனர். அடிப்படை உரிமைச் சாஸனமென்பது சிறுபான்மை வகுப்பு மக்களுக்கு மட்டுமல்ல, நாட்டிலுள்ள சகல மக்களினதும், வகுப்புக்களினதும் அடிப்படை உரிமைகளுக்குப் பாதுகாப்பளிப்பதாகுமென்பதை அவர்கள் உணரத் தவறிவிடுகின்றனர். இதை அவர்களுக்கு உணர்த்த வேண்டியது அவசியம். இந்திய அரசியல் அமைப்பிலும் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கும் ஷரத்துக்கள் இணைக்கப்பட்டுள்ளன. ஜனநாயகக் கொள்கையைப் பின்பற்றும் நமது நாட்டிலும், இதர பல நாடுகளிலுள்ளது போல், மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கும் ஷரத்துக்கள் அடங்கிய அரசியல் அமைப்பை உருவாக்கவேண்டியது அவசியம்; இதுஜனநாயக தர்மமும் கூட.

அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கும் ஷரத்துக்கள் ஐ. நா. மனித உரிமைச் சாஸனத்தின் அடிப்படையிலும் அமைந்திருக்க வேண்டும். சமீபத்தில் ஒரு வழக்கில் தீர்ப்பளித்த நீதியரசர் மனுதாரின் கோரிக்கையில நியாயமிருந்தாலும் கூட, இலங்கையில் அரசியல் அமைப்பில் மனித உரிமைச் சாஸனத்தை அடிப்படையாகக் கொண்ட ஷரத்துக்கள் சேர்க்கப்படாததால் தாம் எதுவும் செய்ய முடியவில்லை என்ற கருத்துப்படக் கூறியிருந்தார்.

எனவே தனிமனிதரோ ஒரு சமுகமோ, தனக்கு நியாயத்தை, மனித நீதியைப் பெறுவதற்கும்கூட அரசியல் அமைப்பில் ஐ. நா. மனிதஉரிமைகள் சாஸனத்தின் அமைப்பில் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கும் ஷரத்துக்கள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தில் அடிப்படை உரிமை சாஸனமொன்று இடம்பெற வேண்டிய அவசியத்தைப் பற்றி நல்லூர்த் தொகுதி எம். பி யும் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவருமான டாக்டர் நாகநாதன் ஒரு விரிவான அறிக்கை வெளியிட்டிருக்கிறார். இந்த விளக்கம் பயனுள்ளதுதான் என்றாலும் அடிப்படை உரிமைகளைச் சேர்க்கக்கூடாதென்றும், 29-வது ஷரத்தை நீக்கவேண்டுமென்றும் கருதும் சில அரசியல் தலைவர்களின் மனதை இவ்வித விளக்க அறிக்கைகளினால் மாற்றிவிட முடியுமென எதிர்பார்க்கமுடியாது. பொது மக்களுக்கு இவ்விதம் விளக்கம் தெரிவிக்கும் அதே சமயம், அரசியல் கொள்கைகளில் வேறுபாடு கொண்டவர்களுடனும் கூட, தனிப்பட்ட முறையிலாவது பேச்சுவார்த்தை நடத்தி, அவர்கள் மனதை மாற்ற முயற்சிசெய்வது சிறந்த செயல்மட்டுமல்ல சிறந்த ராஜதந்திரமுமாகும்.



# ஆசிரியருக்கு கடிதங்கள்

### எமது சங்கமல்ல

20-12-65-ல் வெளியான 'ஈழநாடு' பத்திரிகையில் அல்லாரை காந்திய சேவா சங்கம் ஆலையிறவுப் பாடசாலையில் சிங்கள ஆசிரியரை நியமிக்கக்கோரும் செய்தியொன்று வெளிவந்தது. குறித்த காந்திய சேவா சங்கத்திற்கும் அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லையென்பதையும், எமது காந்தி சேவா சங்கத்தின் கிளை அல்லாரையில் இல்லையென்பதையும் தெரிவிக்க விரும்புகிறோம்.

சோ. க. தம்பிப்பிள்ளை
கௌரவ செயலாளர்.
அகில இலங்கை காந்தி சேவா சங்கம்.

o

### அரசியல் அமைப்பு மாற்றம்

சென்ற 5-ம் திகதி வெளியான ஈழநாட்டில் 'அரசியல் அமைப்புத் திட்டத் திருத்தம்' என்ற தலைப்பில் வெளியான தலையங்கம் இலங்கை அரசியல் அமைப்புத்திட்டத்தில் திருத்தம் கொண்டுவரவேண்டிய அவசியத்தை முன்னோடியாக எடுத்துக்கூறுவதாக இருக்கிறது. இப்போதிருக்கும் அரசியல் அமைப்புத்திட்டத்தில் செய்யப்படவேண்டிய திருத்தங்கள் பற்றி வாசகர்களின் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கஏற்ற ஏற்பாடுகள் செய்வீர்களென எதிர்பார்க்கின்றேன். இதோடு இது பற்றிய விரிவான கருத்துக்களும் ஆசிரியர் தலையங்கங்களும் தங்கள் பத்திரிகையிலமேலும் வெளியிட்டால் அரசியல் துறையில் நல்ல முன்னேற்றம் காண உறுதுணையாக இருப்பதோடு நாட்டின் முன்னேற்றத்துக்கும் தமிழ்ப்பேசும் மக்களின் முன்னேற்றத்துக்கும் வழி அமைப்பதாக இருக்கும்.

எஸ். சிவசுப்பிரமணியம்.
கொழும்பு— 12.

(அரசியல் அமைப்பை மாற்றுவது சம்பந்தமாகவும் புதிய அரசியல் அமைப்பு சம்பந்தமாகவும் வாசகநேயர்கள் தங்கள் கருத்தைசுருக்கமாக எழுதி அனுப்பினால் தகுதிகண்டு பிரசுரிப்போம்.—ஆர்.)

(5-ம் கலத் தொடர்ச்சி)

இலங்கை வானொலியில் இந்துசமய நிகழ்ச்சிகளுக்கான ஒரு புதிய ஆலோசனைச் சபையை அமைச்சர் நியமித்திருக்கிறார். 9 பேர் அடங்கிய அச்சபைக்கு 'ஆத்மஜோதி' ஆசிரியர் கே. ராமச்சந்திரன் அவர்கள் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாயும். வட மாகாணத்துக்காக மானிப்பாய் எம். வைரமுத்து அவர்கள் இச்சபையில் நியமிக்கப்பெற்றுள்ளதாயும் அறிகிறேன். இந்து சமய நிகழ்ச்சிகள் இனியாவது இலங்கை வானொலியில் புத்துயிர் பெறுமென்று நம்புவோம்.

ஃ ஃ ஃ

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன் மிக நல்ல வீணைதடவி. மாசறு திங்கள்கங்கை முடிமேலணிந்து என் உளமே புகுந்த அதனால், ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டும் உடனே, ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே.

— திருஞானசம்பந்த சுவாமிகள்.

### பாடசாலை விஸ்தரிப்பு

உடுப்பிட்டி, ஞாயிறு கரணவாய் தெற்கு சைவ வித்தியாசாலையை விஸ்தரிக்கும் முகமாகப் புதிய கட்டடவேலைகள் ஆரம்பிக்கப்பட விருக்கின்றன. கட்டட வேலைகள் பூர்த்தியாகும் வரை காலஞ்சென்ற கலா படிப்பக மன்ற ஸ்தாபகர் திரு. கு. சுவாமிநாதர் இல்லத்தில் தற்காலிக வகுப்புகள் நடாத்தப்படுமெனத் தெரியவருகிறது.

### மந்திரியின் பாராட்டு

மாத்தளை, ஞாயிறு 'யாழ்ப்பாணத்தில் தமிழ் அதிகாரிஒருவர் உத்தியோக மொழியில் (சிங்களத்தில்) திறமையாகப் பேசியதை குறிப்பிடாதிருக்க முடியாது என சுகாதார மந்திரி திரு. எம். டி, எச். ஜெயவர்த்தன மாத்தளை ஆஸ்பத்திரியில் நடைபெற்ற ஒரு மகாநாட்டில் தெரிவித்தார்.

இது மக்களுக்கு நல்லதொரு உதாரணமாக அமைந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

### உரியவர் யார்?

யாழ்ப்பாணம், திங்கள் எட்டுக் கூப்பன்கள் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர் தகுந்த அத்தாட்சிகளுடன் நேரில்வந்து பெற்றுக்கொள்ளலாம்.

### லூர்த்து மாதா திருநாள்

பருத்தித்துறை, ஞாயிறு தும்பளை லூர்த்து மாதா கோவில் திருநாள் சென்ற வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் விமரிசையாக நடைபெற்றது. வெள்ளிக்கிழமை இரவு லூர்த்து தேவியின் திருச்சொரூபத்தை ஊர்வலமாகக் கொண்டுசென்றனர். அதன் பின் கோவில் குருவானவர் பிரசங்கமும் நடைபெற்றது. அடுத்தநாள் இரவு 'சுபத்திரா' என்னும் சமய நாடகம் இடம்பெற்றது. சிங்கராசகுரவரின் பாடற்பூசையுடன் திருநாள் முடிவுற்றது.

### ரஷ்யா அதிக கொப்பரா வாங்கியது

கொழும்பு, ஞாயிறு தேங்காய் உற்பத்திகுறைந்து கொப்பராவின் விலை அதிகரித்துள்ள இச்சமயத்தில் இதற்குமுன்னெப்பொழுதையும் விட இம்முறை சோவியத் யூனியன் மூவாயிரம் தொன் கொப்பராவாங்கியுள்ளது. கொப்பரா கண்டிஒன்று 217ரூபா50சதமாக சோவியத்யூனியன் வாங்கியிருக்கிறது.

### என்ஜினியர் சம்பளம்

கொழும்பு, ஞாயிறு அரசாங்க சேவையிலுள்ள என்ஜினியர்களின் சம்பளத்தை உயர்த்துவதுபற்றி மந்திரிசபை இம்மாத முடிவிற்குள் முடிவுசெய்யுமென்த்தெரிகிறது.

### இன்று

யாழ். இலக்கிய வட்டத்தின் வெளியீடான திரு. சே. வி. நடராஜன் எழுதிய 'யாழ்ப்பாணக்கதைகள்' வெளியீட்டுவிழா இன்று மாலை ரசிகமணி கனகசெந்திநாதன் தலைமையில் 5.30 மணியளவில் யாழ். நகர மண்டபத்தில்நடைபெறும்.

## ஐயரன் எழுதுவது

'போயா' என்பதற்கு என்ன சொல்லலாம் என்று சில தமிழ் அன்பர்கள் கேட்கின்றனர். போயா என்ற புனித நாளைப் பலர் ''போய்யா, போய்யா'' என்று பகிடிசெய்கிறார்களாம். அமாவாசை, பௌர்ணமி, இரு அட்டமிகள் இந்த நான்கு நாட்களும் தான் 'போயா' என்று விடுமுறை விட்டுள்ளனர்.

இவற்றை விரத நாட்கள் என்று கூறலாமா என்று ஓரன்பரைக் கேட்டேன். அமாவாசையும், பௌர்ணமியும் தான் விரதநாட்களென்றும் அட்டமி விரத நாள் அல்லவென்றும் நல்ல காரியங்களுக்குக் கூடாத நாளென்றும் அவர் சொன்னார். அட்டமி ஏன் கூடாது? எந்த நாளும் அடியார்களுக்கு மிகவும் நல்லதே என்று ஞானசம்பந்தர் 'வேயுறு தோழிபங்கன்' என்னும் பதிகத்தில் உறுதி கூறுகின்றார். அப்படியிருக்க அட்டமி, நவமி கூடாது என்று ஏன் ஒதுக்கவேண்டும்? அந்நாளை சமயவிரதங்களுக்காகக்கூடப் பயன்படுத்தக்கூடாதா? கூடாதாயின் அந்த நாளில் என்னதான் செய்யவேண்டும்? இவை சிந்தனைக்குரியவை. எப்படியும் 'போயா' என்பதற்குத் தமிழில் வேறென்ன சொல்லலாம்? உங்கள் யோசனையைத் தயவுசெய்து சொல்லுங்கள்.

ஃ ஃ ஃ

அமாவாசை, பௌர்ணமி விரத நாளையே நம்மில் பலரும் மறந்துவிட்டோம். இந்துக்களில் எவ்வளவு பேர் அன்று விரதமிருக்கின்றார்கள்? அமாவாசை 'தர்ப்பணம்' எவ்வளவு பேர் செய்கின்றார்கள்? 'போயா' விடுமுறை வந்தபின் அமாவாசை பௌர்ணமி மட்டுமின்றி அட்டமி நவமியும் நமக்கு மீண்டும் ஞாபகம் வருகின்றது. அந்தப் புனித நாட்களை அவமே கழிக்காமல் பயனுள்ள முறையில் கழிக்கவேண்டுமென்ற எண்ணம் சிலருக்கு வந்திருப்பதாக அறிய மகிழ்ச்சியளிக்கின்றது. சமயததலைவர்கள் நல்வழி காட்டவேண்டும்.

ஃ ஃ ஃ

சாதாரணமாக வெள்ளிக்கிழமை மாலையில் இந்துக்கள் கோயிலுக்குப்போவது வழக்கம். ஆனால் வெள்ளிக்கிழமை மாலைகளில் தான் இந்துக்கல்லூரிகளிலும்கிரிக்கெட் மாட்ச் வைப்பதாயும், மாணவர்கள் கோவிலுக்குச் செல்லட்டுமென்ற எண்ணம் பள்ளிக்கூட அதிபர்களுக்கும் கிடையாதென்றும் ஓரன்பர் மிக வேதனையுடன் சொன்னார். அன்றைய தினத்திலே மாணவர்களை அழைத்துக்கொண்டு ஆசிரியர்கள் கோவில்களுக்குப் போய் ஏன் வழிபடக்கூடாது? சைவவாலிபர்கள் நாத்திகர்களாகி வருவதை எப்படித் தடுப்பது? சமய பாடப் பரீட்சைகளை நடத்துவது நல்லதுதான். ஆனால் வெறும் புத்தகப்படிப்புடன் நிறுத்தாமல் கோவில் வழிபாடுகளிலும் அவர்களை ஈடுபடுத்தினால் எவ்வளவு நன்றாக இருக்கும் மற்றச் சமய மாணவ மாணவிகள் புனிதநாட்களிலே தங்கள் வழிபடு ஸ்தலங்களுக்குச் செல்வதைப் பார்த்தாவது சைவசமூகத்தவரும் சிறப்பாக ஆசிரியப் பெருமக்களும் எதிர்காலப் பிரஜைகளான தங்கள் மாணவர்களை நல்வழிப்படுத்த முன்வரக்கூடாதா?

(3-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 நாடுகளின் பிரதிநிதிகளுடன்

# சுப்ரமண்யம் பேசுவார்

## இந்தியாவுக்கு உணவு உதவி வழங்க பலநாடுகள் தீவிர முயற்சி

### இத்தாலியின் நீண்டகால கடன்

ரோமாபுரி, பெப். 13

இத்தாலி, கனடா, ஆஸ்திரேலியா, நியுஸிலந்து, நெதர்லாந்து ஆகிய நாடுகள் இந்தியாவுக்கு உணவு உதவி வழங்க முன் வந்துள்ளன.

அடுத்த புதன்கிழமை உணவு மந்திரி திரு. சுப்ரமண்யம் 30 நாடுகளின் ராஜியப் பிரதிநிதிகளைச்சந்தித்து உணவுப்பிரச்னை பற்றிப் பேசுவார் என அறிவிக்கப்பட்டது.

போப்பாண்டவர் பால் உணவுநிதிக்காக இந்தியாவுக்கு 1 லட்சம் டாலரும், பாகிஸ்தானுக்கு 50,000 டாலரும் வழங்கியிருக்கிறார்.

போப்பாண்டவரும், ஐ. நா. தலைமைக் காரியதரிசி யு தாண்டும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இத்தாலிய மக்கள் இந்தியாவுக்கு உதவி புரியுமாறு அந்நாட்டு அதிபர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

மேற்கு ஜெர்மனி மேலும் உணவுப் பொருட்களும், உணவுக்காக 20 லட்சம் டாலர் நீண்டகாலக் கடனும் இத்தாலி வழங்கியிருக்கிறது.

இத்தாலிய கிறிஸ்தவ ஜனநாயகக்கட்சி 16000 டாலர் நன்கொடை வழங்கியிருப்பதுடன், ஐரோப்பாவிலுள்ள எல்லா கிறிஸ்வ கட்சிகளும் இந்தியாவுக்கு உதவி அளிக்குமாறு கேட்டுக்கொண்டது.

மேற்கு ஜெர்மனி மேலும் உதவி வழங்கும் என இந்நாட்டின் தூதர் டில்லியில் அறிவித்தார். இதுவரை மேற்கு ஜெர்மனி 446 கோடி ரூபாய் வழங்கியிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

5000 டன் அரிசி பர்மாவிலிருந்தும், 10,000 டன் அரிசி ஐக்கிய அராபியக் குடியரசிலிருந்தும் அடுத்த வாரம் இந்தியா வருகின்றன.

அதேசமயம் உணவு பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டிருக்கும் கேரளத்துக்கு 64000 டன் அரிசி இப்போது சென்றுகொண்டிருக்கிறது. ராஜ்யத்தில் கையிருப்பு இப்போது சற்று அபிவிருத்தியடைந்திருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

உத்தர பிரதேசத்திலுள்ள டேராடூன் ஜில்லா மக்கள் தங்கள் 1 மாத அரிசி ரேஷனை கேரளத்துக்கு அளித்திருக்கிறார்கள். இதற்குப் பதிலாக அவர்கள் கோதுமை உணவு பெறுவார்கள்.

வடஇந்தியாவில்

## வரட்சிக்கு மத்தியில் கடும் மழை

### சுபசகுனம் எனநம்பிக்கை

புதுடில்லி, பெப். 13

உணவுப் பிரச்னையைத் தீர்க்க உலகநாடுகள் ஒருபுறம் தீவிரமாக முயற்சி மேற்கொண்டு வருகையில், சுப சகுனம்போல் வடஇந்தியாவில் பரவலாக மழை பெய்ய ஆரம்பித்துள்ளது.

புதிதாக ஏற்பட்டிருக்கும் மழை, தானிய விளைச்சலுக்கு உதவி புரியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

நேற்று டில்லியில் குளிர் கால மழை பெய்ய ஆரம்பித்தது.

காங்கிரஸ்மகாநாடு நடைபெற்ற ஜய்ப்பூரில் இடி முழக்கத்துடன் மழை பெய்ததால் விவாதம் குறைந்த நேரத்தில் முடிந்தது.

காலநிலைகோளாறுகாரணமாக டில்லிக்கு விமான சேவை ரத்துச் செய்யப்பட்டது.

அமிர்தசரஸிலும் கடும் மழை பெய்தது. சாண்டிகாரிலும் நல்ல மழை.

காஷ்மீரில் பெரும் மழையும், ஒரேவாரத்தில் இரண்டாவது முறையாக பனி மழையும் பெய்தன. விமான சர்வீஸ் ரத்துச் செய்யப்பட்டது. பிரதான ரஸ்தாக்கள் பல உடைப்பெடுத்தன.

37 பேர்களுடன் காணாமல்போன இந்திய ஏர் லைன்ஸ் விமானத்தை தேடும் முயற்சி காலநிலைகாரணமாக ஒத்திவைக்கப்பட்டது. இனி ஏப்ரலில்தான் தேடும் முயற்சி தொடரும்.

## "சீனுவுடன் பேச்சு நடத்த இன்னும் சமயம் வரவில்லை"

### பிரெஞ்சு பத்திரிகைக்கு ஸ்ரீமதி இந்திரா பேட்டி

பாரிஸ், பெப். 13

"சீனுவுடன் பேச்சு நடத்த எப்போதும் கதவுதிறந்தேஇருக்கிறது. ஆனால் அதற்கு அடிப்படை ஒன்று இன்னும்காணப்படவேண்டும்' என இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி பிரெஞ்சு பத்திரிகையான 'லேமாண்ட்' நிருபருக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

ஆனால் சீனு மிரட்டல் குறிப்புக்களை அனுப்பிவருவதும், பாரத விரோத இயக்கத்தை தீவிரப்படுத்தி வருவதும் உங்களுக்குத் தெரியும் என்றும் அவர் கூறினார்.

ஸ்ரீமதி காந்தி பிரெஞ்சு மொழியில் பேசிய இந்தப் பேட்டி பாரிஸில் இன்று பிரசுரிக்கப்பட்டது.

"டாஷ்கண்ட் பிரகடனத்தை அடுத்து சீனுவுடன் இந்தியா பேச்சுநடத்த தக்க தருணம் வந்துவிட்டது எனக்கருதலாமா?" என நிருபர் கேட்டதற்கு, பிரதமர் ஆரம்பத்தில்கூறியவாறு பதிலளித்தார்,

"சீனு அணுவல்லரசாகி இருப்பதால் இந்தியாவும் அணுகுண்டு செய்யுமா" எனக் கேட்கப்பட்டது.

"அணுக்குண்டு எங்களுக்குப்பயனளிக்கும் என நான் கருதவில்லை இந்தியாவசம் அணுக்குண்டுக்குவியல்இருந்தாலும், அது அணுப்போரைத் தடுத்துவிடப்போவதில்லை" என்றார் ஸ்ரீமதி காந்தி.

"இந்தியாவும் பிரான்சும் கலாச்சார, கல்வித் தொடர்புகளை மேலும் அபிவிருத்தி செய்ய முயலவேண்டும் என்றும் அவர் கூறினார்.

## தணிக்கைகள் அகன்றன

புதுடில்லி, பெப். 13

காவலில் வைக்கப்பட்டிருந்த 486 பாகிஸ்தானியர் நேற்று பாக். அதிகாரிகள் வசம் ஒப்படைக்கப்பட்டனர். பாகிஸ்தானில் காவலில் வைக்கப்பட்டிருக்கும் 218 இந்தியர்கள் இன்று ஒப்படைக்கப்படுகிறார்கள்.

இந்தியா - பாகிஸ்தானுக்கிடையே டெலிபோன், தந்தி தணிக்கையை பாகிஸ்தான் இப்போது அகற்றியிருக்கிறது. தபால் தணிக்கையும் அகற்றப்படும்என அறிவிக்கப்படுகிறது.

மேற்கு ஜெர்மன்

## ராஜதந்திரிக்கு வெளியேற உத்தரவு

மாஸ்கோ, பெப். 13

மாஸ்கோவிலுள்ள மேற்கு ஜெர்மன் ராஜதந்திரி ஒருவரையும், இரு மேற்கு ஜெர்மன் நிருபர்களையும் திருப்பி அழைத்துக்கொள்ளுமாறு ரஷ்யாகேட்டுள்ளது. மேற்கு ஜெர்மனியிலிருந்து ஒரு ரஷ்ய ராஜதந்திரியும், இரு ரஷ்ய நிருபர்களும் வெளியேற்றப்பட்டதற்கு பதில் நடவடிக்கையாக இவ்வாறு செய்யப்படுவதாய் மேற்கு ஜெர்மனி ஆட்சேபித்திருக்கிறது.

## லண்டனில் காமா

லண்டன், பெப் 13

பெச்சுவானலாந்து முதல்வர் செரட்ஸி காமா லண்டன் வந்திருக்கிறார். தமது நாட்டின் சுதந்திரம்பற்றி அவர் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் பேசுவார். பெச்சுவானலாந்து வருகிற செப்டம்பர் மாதத்தில் சுதந்திரம் அடைகிறது.

## எனது விஜயம் வரை காத்திருக்காதீர்!

புதுடில்லி, பெப். 13

அமெரிக்க பொருளாதார உதவியை விரைவில் ஆரம்பிக்குமாறு, பிரதம மந்திரி ஸ்ரீமதி இந்திராகாந்தி ஜனதிபதி ஜோன்ஸனைக் கேட்டிருக்கிறார்.

தாம் மார்ச் பிற்பகுதியில் அல்லது ஏப்ரல் முற்பகுதியில் தான் அமெரிக்காவுக்கு வரமுடியும் என்றும், தமது விஜயம்வரை காத்திருக்காமல் அதற்கு முன்பே இந்த உதவியை ஆரம்பிக்க வேண்டும் என்றும் அவர் தமது கடிதத்தில் கூறியிருக்கிறார்.

வட வியட்னமுக்கு உதவிபற்றி

## கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் மகாநாடு

### ரஷ்யா கூட்டுகிறது

மாஸ்கோ, பெப். 13

வியட்னம் சம்பந்தமாக ஹொனலுலுவில் ஜனதிபதி ஜோன்ஸன் நடத்திய மகாநாடு தென்கிழக்காசியாவின் சமாதானத்துக்கு எதிரானதென்றும், வடக்கு வியட்னமுக்கு ரஷ்யா தொடர்ந்து உதவியளித்து வருமென்றும் ரஷ்யா அறிவித்திருக்கிறது.

வடக்கு வியட்னமுக்கு ராணுவ, பொருளாதார உதவிகளை ஒருங்கிணைக்கும் பொருட்டு கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் மகாநாடு ஒன்றை ரஷ்யா அழைத்திருப்பதாய் அறிவிக்கப்பட்டது, இந்த மகாநாட்டில் கலந்துகொள்ள அல்பேனியா மறுத்திருக்கிறது.

### அமெரிக்க கைதிகள்

வடக்கு வியட்னம் வசமுள்ள அமெரிக்கக்கைதிகள் யுதத் கைதிகளைப்போல் விசாரிக்கப்படுவது சர்வதேச ஜெனிவா கோட்பாட்டை மீறிய செயல் என அமெரிக்கா அறிவித்திருக்கிறது. யுத்தக்கைதிகளைப் போல் அவர்கள் நடத்தப்படுவார்களென கெய்ரோ பத்திரிகையான "அல் அஹ்ராமி"ல் வெளியான தகவலைத்தொடர்ந்து ராஜாங்க இலாகா இந்த அறிவிப்பை வெளியிட்டது. வடக்கு வியட்னமில் 60 அமெரிக்க விமானிகள் சிறைப்பட்டிருப்பதாக மதிப்பிடப்படுகிறது.

இதற்கிடையில் தெவியட்னமுக்கு அதிக அமெரிக்கத் துருப்புக்கள் தேவைப்படுவதாக ஜனதிபதி ஜோன்ஸன் அறிந்திருக்கிறார்.

### ஹம்ப்ரி

உப ஜனதிபதி ஹம்ப்ரி தனது சைகோன் விஜயத்தை முடித்துக்கொண்டு, இன்று தாய்லாந்து சென்றார். திரு. ஹம்ப்ரி டில்லியில் வியட்னம் பற்றி முக்கிய பேச்சு நடத்துவார்என அறிவிக்கப்பட்டது.

தென்வியட்னமில் அமெரிக்கா தோற்கும்என்ற பேச்சுக்குமுற்றுப்புள்ளிவைத்தாகிவிட்டது என வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்க் கூறினார். சமாதானம் வாஷிங்டனின் கையில் இல்லையென்றும், ஹானோயின் கையிலேயே அது இருக்கிறதென்றும் மேலும் அவர் கூறினார்.

### 260 விமானங்கள் பலி

இதுவரை வியட்னமில் 260 அமெரிக்க விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதாயும், இவற்றில் 176 வடவியட்னமில் வீழ்த்தப்பட்டதாயும் அறிவிக்கப்பட்டது.

நேற்று அரசாங்கத் துருப்புக்கள் வியட்காங்கியருக்கு எதிராக பெரும் வெற்றி ஒன்றை அடைந்ததாகவும், இது சம்பந்தமான கைகலப்பில் 140 வியட்காங்கியர் கொல்லப்பட்டனர் என்றும் மேலும் கூறப்பட்டது.

டில்லியிலுள்ள கனடா தூதர் அரசாங்க அதிகாரிகளுடன் வியட்னம் பற்றி ஆலோசனை நடத்தினர்.

## 5 ரஷ்யருக்கு மரணதண்டனை

மாஸ்கோ, பெப் 13

யுத்தத்தின்போது நாஜிகளுடன் ஒன்று சேர்ந்து 10,000-க்கு மேற்பட்ட மக்களை படுகொலை செய்த குற்றத்திற்காக 5ரஷ்யர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது மற்றொரு ரஷ்யருக்கு 15 ஆண்டு சிறைத் தண்டனை கிடைத்தது.

## பகைநாகர்கள் அக்கிரமம்

புதுடில்லி, பெப். 13

ஆயுதம் தாங்கிய பகைநாகர்கள் கிராமம் ஒன்றில் 30 வீடுகளுக்குத் தீ வைத்து எரித்தனர் என்றும், இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அஸ்ஸாம் அரசாங்கம் உதவியளித்துவருகிற தென்றும் அறிவிக்கப்படுகிறது.

ஆயுதம் தாங்கிய பல நாகர்கள் எல்லைக்கிராமங்களில் சுற்றிவருகிறார்கள் என்றும், வரிகொடுக்குமாறு அவர்கள் மக்களை இம்சித்து வருகிறார்கள் என்றும் மேலும் அறிவிக்கப்பட்டது.

ரயில்பாதைகளுக்கு தீவிர காவல் போடப்பட்டிருக்கிறது.

## கர்ப்பத்தடை பற்றி போப்

ரோமாபுரி, பெப். 13

கர்ப்பத்தடை போன்ற விஷயத்தில் கத்தோலிக்க திருச்சபை விரைவாகச் செயலாற்ற முடியாதெனப் போப்பாண்டவர் நேற்றுக் கூறினார்.

## பாகிஸ்தான் ராணுவதினம்

ராவல்பிண்டி, பெப். 13

பாகிஸ்தானில் இன்று ராணுவதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

## காங்கிரஸ் மகாநாடு முடிவு

நேருநகர், பெப். 13

இங்குநடைபெற்ற 70வது காங்கிரஸ் மகாநாடு, கனத்த மழை காரணமாக திட்டமிட்ட நேரத்திற்கு முன்பாகவே முடிவடைந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மனதில் அழுக்கு இருக்கும்வரை தெய்வத்தை நினைக்கமுடியாது'

## சுவாமி பிரணவானந்தஜி உரை

யாழ்ப்பாணம், திங்கள் 'ஒவ்வொருவரும் நான்கு விஷயங்களை முக்கியமாகக் கவனிக்கவேண்டும். முதலாவதாக வாழ்க்கையிலுள்ள கஷ்டங்களை பற்றி அறியவேண்டும். இரண்டாவதாக மரணம் சம்பவிப்பது பற்றி அறியவேண்டும். மூன்றாவதாக பெரியோர்கள் ஞானிகள் சம்பாஷணைகளை அறியவேண்டும். நான்காவதாக கடவுளைப் பற்றி அறியவேண்டும்'

யாழ்ப்பாணம் திவ்விய ஜீவன சங்கத்தின் விசேஷ பொதுக்கூட்டம் நேற்று மாலை வைமன் ரோட்டில் உள்ள அருளகத்தில் நடைபெற்றபோது மலேசிய திவ்யஜீவன சங்கத் தலைவர் சுவாமி பிரணமானந்தஜி சொற்பொழிவாற்றுகையில மேற்கண்டவாறு கூறினர்.

சுவாமி பிரணவானந்தஜி மேலும் கூறியதாவது;-

வாழ்வில் உள்ள கஷ்டங்களைப் பற்றி யோசிக்க வேண்டும். அக்கஷ்டங்களை நீக்குவதற்கான வழிகளைப் பற்றி சிந்திக்கவேண்டும். மானிடப் பிறவி எடுத்த ஒவ்வொருவரும் மரணம் பற்றி யோசிக்கவேண்டும். பிள்ளை பிறந்ததும் அழுகிறது. எதற்காக இந்த உலகத்தில் பிறந்தோம் என நினைத்து அழுகின்றது. மரணப்படுக்கையில் தான் மரணத்தை பப்றி யோசிக்கக்கூடாது. அதற்கு முன்பாகவே யோசிக்கவேண்டும்.

ஞானிகள், மகான்கள், யோகிகள், சந்நியாசிகளின் உபதேசப்படி ஒழுகி நடக்க வேண்டும். இல்லாவிட்டால் மனதில் அழுக்கு இருக்குமட்டும் தெய்வத்தை நினைக்க முடியாது நான்காவது முக்கியவிஷயமாக நாம் கடவுளை நினைக்கவேண்டும். எத்தத் தொழிலையும் நாம் ஆரம்பிக்கப்போகும் சமயமும், கடவுளை நினைக்க வேண்டும். அவரை நினைத்தால் நாம் எண்ணியதை அடையலாம்.

யாழ்ப்பாணம் திவ்ய ஜீவனசங்கத் தலைவர் திரு. சி. தனபாலசிங்கம் சுவாமியவைரவேற்ருர்.

O

# தெரிவுக் குழுநியமிக்க கோரும் பிரேரணை

## கட்சித்தலைவர்கள் செவ்வாயன்று ஆராய்வர்

பம்பலப்பிட்டி, ஞாயிறு இலங்கைக்கு புதிய அரசியல் சட்டமொன்றை வரைவதற்கு ஒரு தெரிவுக் கமிட்டியை நியமிக்கக் கோரும் பிரேரணை சம்பந்தமாக அரசியல்கட்சித் தலைவர்கள் வரும் செவ்வாய்க்கிழமை கூடவிருக்கிருர்கள்,

புதிய அரசியல் கூட்டம் உருவாக்கப்படும்போது மக்களின் சோஷலிஸ தேவைகளுக்கும் அதில் இடமளிக்சப்படவேண்டுமென எதிர்க்கட்சி வட்டாரங்கள் கருத்துக்கொண்டுள்ளதாக அறியப்படுகிறது.

வரும் செவ்வாய்க்கிழமை அரசியல் கட்சித் தலைவர்கள் கூடும்போது தெரிவுக் கமிட்டி நியமிக்கப்படும் விஷயத்தில் பொதுவான உடன்பாட்டை ஏற்படுத்த கட்சித் தலைவர்கள் முயற்சிப்பார்களென நம்பப்படுகிறது.

விவசாயத்தில்

# பயிற்சி பெற்றவர்களுக்கு இடமளிக்கவும்

## வவனியா எம். பி. கோரிக்கை

வவனியா, ஞாயிறு விவசாயத்துறையில் மாணவர்களுக்குப் பயிற்சி யளிக்குமுகமாக புதிய மாணவ ஆசிரியர்களைத் தெரிவுசெய்யும் அரசாங்கத்தின் திட்டம் சம்பந்தமாக வவனியா எம். பி. கல்விமந்திரிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் விவசாயப் பயிற்சிப் பாடசாலைகளில் பயிற்சி பெற்று இதுவரை வேலையற்றிருக்கும் நூற்றுக்கணக்கானவர்களுக்கு இவ்விதநியமனங்களை வழங்குமாறு கோரியுள்ளார்.

எம். பி. அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:—

குண்டசாலை, பேராதனை ஆகிய விவசாயப் பாடசாலைகளில் ஒரு வருடகாலம் அல்லது இருவருடப் பயிற்சி பெற்று வெளியேறியுள்ள பல மாணவ மாணவிகள் பலவருடங்களாக வேலையற்றிருக்கிருர்கள். இவர்களைப் பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமித்தால், இவர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதோடு அரசாங்கம் அதிக பணம் மிச்சப்படுத்துவதாகவும் இருக்கும்.

## ஜோன்போஸ்கோ திருநாள்

யாழ்ப்பாணம், திங்கள் புனித ஜோன்போஸ்கோ திருநாள் யாழ்ப்பாணம் புனித ஜோன்போஸ்கோ பாடசாலையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. வண. ஜே. ஏ மதுரநாயகம் திருநாள் பூசையை நடாத்தினர்.

மாலை நிகழ்ச்சிகளாக விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று பரிசுகள் வழங்கப்பட்டன,

பரிசளிப்பு விழாவுக்குத் தலைமைவகித்த சங்கைக்குரிய தாயார் பேசுகையில், பாடசாலையின் முன்னேற்றம், கடந்த ஆண்டுகளிலும் பார்க்க கூடுதலாக முன்னேறியுள்ளதென்றும் எட்டாம் வகுப்பிலும் ஐந்தாம் வகுப்பிலும் நடாத்தப்பெற்ற அரசாங்கப் பரீட்சையில் எல்லாமாணவர்களும் சித்தியடைந்துள்ளதுடன் பெரும்பாலான மாணவர்கள் விசேட திறமையுடன் சித்திபெற்றமை பாடசாலைக்குப் பெருமையளிப்பதாகும் என்றும் குறிப்பிட்டார்.

## விமான விபத்துப் பற்றி கமிஷன்

பாரிஸ், பெப். 13 பிரான்ஸில் விபத்துக்குள்ளான 'ஏர் இந்தியா போயிங்'' விமானம் சம்பந்தமாக பிரெஞ்சு அரசாங்கம் ஒரு விசாரணைக் கமிஷனை நியமித்திருக்கிறது.

## ஆசிய அபிவிருத்தி வங்கி

மணிலா, [illegible] இவ்வாண்டு மத்தியிலிருந்து ஆசிய அபிவிருத்தி வங்கி செயல்படும்.

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், சனி யாழ். மறுமலர்ச்சி மன்றக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபொழுது புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாகிகள் வருமாறு: தலைவர்: பொ. செல்வரத்தினம்; உபதலைவர்கள். பொ. கோவிந்தசாமி, ஏ. ரி. பொன்னுத்துரை; காரியதரிசி: ச. நடேசபாதம்; உபசெயலாளர்: வே. மண்டலேஸ்வரன், தனாதிகாரி: க. ஞானபண்டிதன். பத்துபேர் கொண்ட நிர்வாக சபையும்தெரிவுசெய்யப்பட்டது.

மாங்குளம், ஞாயிறு 1964-ம் ஆண்டு மார்கழியில் வீசிய புயல்காற்றினல் சேதமடைந்திருந்த மாங்குளம் கிராம முன்னேற்றச் சங்கக் கட்டடம் திரும்பவும் புனருத்தாரணம் செய்யப்பட்டு புதிய நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. புதிய கமிட்டி நெடுங்கேணி காரியாதிகாரி திரு. என். செந்தில்நாதன் தலைமையில் நியமிக்கப்பட்டுளளது.

கூட்டமுடிவில் நாட்டின் முன்னேற்றம், பொருளாதார அபிவிருத்தி, நாட்டின் பொலிஸ் பாதுகாப்பு, ஆகியன குறித்து கருத்தரங்கம் இடம்பெற்றது.

மருதங்கேணி, ஞாயிறு மருதங்கேணி கந்தசாமி கோவில் புது வருட பரிபாலனசபை நிர்வாகிகளாக பளை காரியாதிகாரி திரு. கந்தப்பிள்ளையின் தலைமையில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

திருவாளர்கள்: இ. தம்பிப்பிள்ளை, க. வ. நடராசா, வே. ஆறுமுகம், க. வேலுப்பிள்ளை, வே. பொன்னையா.

## பாரபட்சம்

ஹிங்குராக்கொடை, சனி ஹிங்குராக்கொடையிலுள்ள தபாற்கந்தோரில் கடமையாற்றும் ஊழியர் தமிழ்மக்கள்மீது பாரபட்சமாக நடந்துகொள்வதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட இந்த ஊழியர் தமிழர் யாராவது மணி ஆர்டர் மாற்றுவதற்குச் சென்ருல் வேண்டுமென்றே அவர்களைத் தாமதப்படுத்துவதாகவும் தமக்குத் தமிழ் தெரியாது எனத் தட்டிக்கழிப்பதாகவும் தெரிகிறது.

## விமானத்தை காணவில்லை

மாட்ரிட், பெப். 13 8 பேரடங்கிய அமெரிக்கப் போக்குவரத்து விமானமொன்று தெற்கு ஸ்பெயினில் காணமற்போய்விட்டதாக அறிவிக்கப்பட்டது.

ராஜா
(யாழ்ப்பாணம்)
6-30, 9-4[illegible]க்கு மட்டும்
ஆலய மணி
தினசரி 4-15க்கு மட்டும்
த ரெறர்
வயது வந்தவர்களுக்கு மட்டும்

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி-6-30, 9-30 மணி
விடுமுறை நாட்களில் 2-30 மணி
பானுமதி - ராஜன்
நடித்த
அன்னை

REGAL—JAFFNA
NOW SHOWING
Richard Carlson
Veronica Hurst
in
THE MAZE
(ADULTS ONLY)



யாழ்ப்பாணம் முன்னைநாள் உதவி மேயர் முகாந்திரம் எஸ். ஆர். தளையசிங்கம் தம்பதிகளின் புத்திரன் வழக்கறிஞர் திரு. யோகநாதனுக்கும், வல்வெட்டி இராசரத்தினம் தம்பதிகளின் புத்திரி செல்வி விமலா தேவிக்கும் சென்ற புதன் காலை நல்லூர் சிவன்கோவிலில் திருமணம் நடைபெற்றது. அன்று மாலை யாழ். நகர மண்டபத்தில் விருந்துபசாரமும் நடைபெற்றது. பல பிரமுகர்கள் இரண்டு வைபவத்திலும் கலந்துகொண்டு மணமக்களை ஆசீர்வதித்தார்கள்.

பல்கலைக் கழகம்

## இம்மாதம் 22-ம் திகதி ஆரம்பமாகும்

பம்பலப்பிட்டி, ஞாயிறு இலங்கை பல்கலைக் கழகம் (கொழும்பு, பேராதனை) ஆரம்பமாகும் தினம் இம்மாதம் 22-ம் திகதி வெள்ளிக்கிழமை என பல்கலைக் கழக கவுன்ஸில் முடிவு செய்துள்ளது.

இறுதி, ஆரம்பப் பரீட்சைகளை ஜூலை, ஆகஸ்ட் மாதங்களுக்குப் பின்போடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது

மிருக வைத்தியப் பகுதிக்குப் பொறுப்பாளராக திரு. பீற்றர் செனிவரத்தின நியமிக்கப்பட்டுள்ளார்.

மார்ச் 4-ம் திகதி பல்கலைக்கழக தனிநபர்க் கமிஷனின் அறிக்கையை ஆராய்வதற்காக ஒரு பொதுக்கூட்டம் நடாத்துவதெனவும், பல்கலைக் கழக மாணவர்களின் வேலைநிறுத்தத்தின்போது கட்டடங்களுக்கும், பல்கலைக்கழகத்துக்குச் சொந்தமான பொருட்களுக்கும் சேதம் விளைவித்த மாணவர்கள்மீது நடவடிக்கைஎடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## எதிர்க்கட்சிக் கூட்டம்

புதுடில்லி, பெப். 12 எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் நேற்று 2 நாள் கூட்டம் ஒன்றை ஆரம்பித்திருக்கிருர்கள். தேர்தல் உடன்பாடுபற்றி அவர்கள் முடிவு செய்வார்கள்.

இப்பொழுது திரையிடப்படுகிறது
கிங்ஸ்லி (கொழும்பு) நவா (கொம்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)
மொடேர்ன் (பண்டாரவளை) மொடேர்ன் (பதுளை) விஜிதா (அட்டன்)
தீவொளி (நுரரளை) கல்யாணி (நாவலப்பிட்டி) சந்தியா (கம்பளை)



பூம்புகார்
எஸ். எஸ். ஆர். — விஜயகுமாரி
கே. பி. சுந்தராம்பாள்,
ராஜ்ஸ்ரீ, நாகேஷ் - மனோரமா, ஓ. ஏ. கே. தேவர்
மற்றும் பலர் நடித்த
அனைவரின் பாராட்டுதலைப்பெற்ற திரைஓவியம்.

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
விடுமுறை நாட்களில் காலை 10 மணிக்கு
ஜெமினி, சிவாஜி, சாவித்திரி
நடித்த
பதிபக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### விற்பனை விளம்பரம்

குலைக்கப்படும் உடும்பிராய் சிகரட் புகையிலைச் சங்கத்துக்கு சொந்தமான ஒன்பது போறணைகள், இரு கொட்டில்கள், அடுப்பு உதிரிப்பாகங்கள் முதலியன விற்பனவுக்கு உள்ளன. வாங்க விரும்புபவர்கள் 20-2-66 காலை 10 மணிக்கு முன்னதாக த. சிவசுப்பிரமணியம் குலைப்பாளர் யாழ். மேற்கு கூ. உ. ஆணையாளர் மேற்பார்த்து என்னும் விலாசத்துக்கு பதிவுத் தபால் மூலம் மனுப்பண்ணவும். 2002

### மனேஜர் தேவை

வட்டுக்கோட்டை சிகரெட் புகையிலை உற்பத்தியாளர் சங்கத்திற்கு பின்வரும் தகைமைகளையுடையவர்கள் சங்கக்காரியதரிசிக்கு 24-2-66 க்கு முன்பு கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் மனுச்செய்ய வேண்டும்.

**தகைமைகள்**

1. வயது 31-1-66-ல் 25 க்குக் குறையாமலும் 35 க்கு மேற்படாமலும்.
2. தராதரம்
   அ. சுனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம்.
   ஆ. ஆங்கில அறிவு கவனிக்கப்படும்.
   இ. கூட்டுறவுப் பயிற்சி விரும்பத்தக்கது.
3. பிணை ரொக்கம் 500 ரூபா, ஆதனம் 2000 ரூபா.
4. சம்பளம் 60 ரூபா (சகலபடிகளும் உட்பட).
5. அண்மையில் பெற்ற நற்சாட்சிப் பத்திரமிரண்டு.

ஆ. நவரத்தினம்
காரியதரிசி.
வட்டுக்கோட்டை. 2003

### Vacancy

Applications are invited from Ceylon Nationals for the post of Administrative Secretary, Jaffna District Co-op Harbour Services Union Ltd. The applicants should be graduates of recognised Universities. Special consideration will be given to (i) Co-operative Training (ii) Experience in Ship Unloading and Port work (iii) Executive and Managerial Experience and (iv) Knowledge of Accounts.

The Salary Scaleis Rs. 3,000/- Rs. 120/- x 6 / Rs. 180/- x 6 Rs 4,800/-

Applications close on 28-2-66.

Further particulars can be obtained from,
The Hony. Secretary,
J. D. C. H. S. U. Ltd.
25, Front street,
Jaffna. 2001

### மகாசிவராத்திரி விழா

கைதடி, ஞாயிறு

மகாசிவராத்திரி தினத்தை மும்முறை கைதடி ஸ்ரீ வீரகத்திப்பிள்ளையார் கோவிலில்சிறப்பாகக்கொண்டாட இந்து வாலிபர்சங்க தொண்டர்சபை விரிவான ஏற்பாடுகளைச் செய்துவருகிறது.

இரவு நான்கு சாமங்களும் விசேஷ பூசை, அபிஷேகங்களும், சொற்பொழிவு, கூட்டு வழிபாடு ஆகியன நடைபெறும்.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**




கிரிக்கெட்

## சென்பற்றிக்ஸ் கல்லூரியிடம் யாழ். இந்து தோற்றது!

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். இந்துக்கல்லூரிக்கும் சென்பற்றிக்ஸ்கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற காரசாரமான கிரிக்கட் போட்டியில், கடுமையான போட்டியின் பின்னர் சென்பற்றிக்ஸ் கல்லூரி 31 ஓட்டங்களால் யாழ். இந்துக் கல்லூரியைத் தோற்கடித்தது.

முதலில் சென். பற்றிக்ஸ் கல்லூரியே துடுப்பெடுத்தாடியது. சென்பற்றிக்ஸ் கல்லூரி சகல விக்கட்டுகளையும் இழந்து 66 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சந்தியாக்கோ பத்து ஓட்டங்களையும், ஏ. சி. கிறவ்தர் 20 ஓட்டங்களையும், ஜெயரத்தினம் 7 ஓட்டங்களையும், புவனேந்திரன் 7 ஓட்டங்களையும், குலநாதன் 8 ஓட்டங்களையும் பெற்றனர்.

யாழ். இந்துக் கல்லூரியின் பந்தெறி வீரர்களான சண்முகலிங்கம் 28 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 6 விக்கட்டுகளையும், சிவஞானந்தன் 17 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு ஒரு விக்கட்டையும், அருளானந்தன் 4 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 3 விக்கட்டுகளையும் வெற்றிகரமாக வீழ்த்தினார்கள்.

இதையடுத்து யாழ். இந்துக்கல்லூரி துடுப்பெடுத்தாடியது. யாழ். இந்துக் கல்லூரி இவ் ஆட்டத்தில் சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 74 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பாலேந்திரன் 16 ஓட்டங்களையும், கந்தசாமி 16 ஓட்டங்களையும், சின்னராசா 9 ஓட்டங்களையும் பெற்றனர்.

இச் சந்தர்ப்பத்தில் சென்பற்றிக்ஸ் பந்தெறி வீரர்களான ஏ. சி. கிறவ்தர் 18 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 6 விக்கட்டுகளையும், ஏ. பெனடிக்ற் 25 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 3 விக்கட்டுகளையும் வீழ்த்தினார்கள்.

இதையடுத்து நடைபெற்ற 2-வது ஆட்டத்தை சென்பற்றிக்ஸ் துடுப்பெடுத்தாடி ஆரம்பித்தது. இவ்வாட்டத்தில் சென் பற்றிக்ஸ் சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 129 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குலநாதன் 21 ஓட்டங்களையும், கிறவுதர் 23 ஓட்டங்களையும், ஏ. சி. பீரிஸ் 35 ஓட்டங்களையும், எஸ்வோல்ட் 15 ஓட்டங்களையும் பெற்றனர். இச் சந்தர்ப்பத்தில் யாழ். இந்துக்கல்லூரின் பந்தெறி வீரர்களான சண்முகலிங்கம் 27 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 4 விக்கட்டுகளையும், சிவசத்தியசீலன் 28 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 2 விக்கட்டுக்களையும், கந்தசாமி 25 ஓட்டங்கள் நஷ்டதிதுக்கு 2 விக்கட்டுகளையும் வீழ்த்தினார்கள். இதையடுத்து யாழ். இந்துக்கல்லூரி தனது இரண்டாவது தடவையாக ஆட்டத்தை ஆரம்பித்தது. இத்தடவை யாழ். இந்து தனது சகல விக்கட்டுகளையும் இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றது. இச் சந்தர்ப்பத்தில் சென்பற்றிக்ஸ் கல்லூரியின் பந்தெறிவீரர்களான ஏ. சி. கிறவுதர் 29 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 2 விக்கட்டுகளையும், ஜெயரத்தினம் 6 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 4விக்கட்டுகளையும் புவனேந்திரன் 17 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 4 விக்கட்டுகளையும் வெற்றிகரமாக வீழ்த்தினார்கள். இரண்டாவது ஆட்டத்தில் யாழ். இந்துக்கல்லூயின் துடுப்படி வீரர்களான பரிலேந்திரன் 14 ஓட்டங்களையும், தர்மரத்தினம் 13 ஓட்டங்களையும், அருளானந்தன் 10 ஓட்டங்களையும், சிவபாலன் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

போட்டி முடிவில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 31 ஓட்டங்களால் யாழ். இந்துக் கல்லூரியைத் தோற்கடித்தது. இப்போட்டி சென் பற்றிக்ஸ் மைதானத்தில் நடைபெற்றது.

## யாழ். மத்திய கல்லூரியிடம் மகாஜனா தோற்றது!

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண மத்தியகல்லூரிக்கும், மகாஜனக்கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி மகாஜனக் கல்லூரியை ஒரு இன்னிங்ஸ் 31 ஓட்டங்களினால் தோற்கடித்தது. இப்பெரும் வெற்றிக்கு யாழ். மத்தியகல்லூரியின் அதிவேகப் பந்துவீச்சுக்காரரான கணேசகுமாரும், சிறந்த துடுப்படி வீரரான டி. புரட்சிதாசனுமே காரணகர்த்தாக்களாக அமைந்தனர். கணேசகுமார் 22 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 5 விக்கெட்டுகளை அபாரமாக வீழ்த்தினர். புரட்சிதாசன் தமது விக்கெட்டை இழக்காமல் 51 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக்கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குமாரலிங்கம் 45 ஓட்டங்களையும், இராமச்சந்திரன் 55 ஓட்டங்களையும், ரத்தினநாதன் ... ஓட்டங்களையும் வெற்றிகரமாகப் பெற்றனர். இச்சந்தர்ப்பத்தில் யாழ். மத்தியகல்லூரியின் எறிபந்து வீரர்களான கணேசகுமார் 22 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 5 விக்கெட்டுகளையும். சண்முகலிங்கம் 16 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்கள். யாழ். மத்தியகல்லூரி துடுப்பெடுத்தாடி 9 விக்கெட்டுகளை இழந்து மொத்தம் 223 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கே. கங்காதரன் 14 ஓட்டங்களையும். என். பேரின்பநாயகம் 12 ஓட்டங்களையும், எஸ். எம். ஏபிரகாம் 28 ஓட்டங்களையும், பி. பாலேந்திரன் 35 ஓட்டங்களையும் எஸ் சிவசோதி 4 ஓட்டங்களையும், டி. புரட்சிதாசன் தனது விக்கெட்டை இழக்காமல் 51 ஓட்டங்களையும் பெற்றனர். இச்சந்தர்ப்பத்தில் மகாஜனக்கல்லூரியின் எறிபந்துவீரர்களான விஜயகுமார் 66 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 4 விக்கெட்டுகளையும், ஸ்ரீகாந்தன் 104 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 5 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்கள். இரண்டாவது ஆட்டத்தில் மகாஜனா துடுப்பெடுத்தாடி மொத்தம் 56 ஓட்டங்களே பெற்றது. இதில் மயில்வாகனம் 12 ஓட்டங்களையும் ரத்தினநாதன் 11 ஓட்டங்களையும், ஸ்ரீகாந்தன் 22 ஓட்டங்களையும் பெற்றனர். இச்சந்தர்ப்பத்தில் யாழ். மத்திய கல்லூரியின் பந்தெறி வீரர்களான கே. டி. கணேசகுமார் 27 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 6 விக்கெட்டுகளையும், கே. சண்முகலிங்கம் 24 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 2 விக்கெட்டுகளையும், என். சத்தியதேவா ஒரு ஓட்டமும் கொடுக்காமல் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இப்போட்டி முடிவில் யாழ். மத்தியகல்லூரி மகாஜனக்கல்லூரியை ஒரு ஆட்டத்தாலும், 31 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது. இப்போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

## கடுகதிக்கு நேர்ந்தகதி!

யாழ்ப்பாணம், திங்கள்

பருத்தித்துறையிலிருந்து நேற்றுக்காலை 7-45-க்கு யாழ்ப்பாணத்துக்கு உடுப்பிட்டி ஊடாக வந்துகொண்டிருந்த கடுகதி பஸ் பிரயாணிகள் எந்தநோக்கத்துடன் அதில் ஏறினர்களோ அந்த நம்பிக்கையை இழக்கச் செய்துவிட்டது. யாழ்ப்பாணத்துக்கு காலை 8-45-க்கு வந்து சேரவேண்டிய அந்த பஸ் 9-30க்கே வந்து சேர்ந்தது.

வழியில் அந்த பஸ்ஸில் ஏற்பட்ட கோளாறே இந்த தாமதத்துக்குக் காரணமாக இருந்தது. அந்தப் பழைய பஸ்ஸை விரைவில் செலுத்துவதில் சாரதி தமது திறமையை முற்றிலும் பிரயோகித்துப் போராடிக்கொண்டிருந்த காட்சி பிரயாணிகளின் மனதை உருகவைத்துவிட்டது.

பிரயாணத்தின் ஒருகட்டத்தில் ஆகாயத்தில் பறப்பதுபோன்ற ஒரு உணர்ச்சி பிரயாணிகளிடையே ஏற்பட்டது. காரணம் நாலாபுறமும் புகை சூழ்ந்திருந்ததே.

கல்வியங்காட்டிற்கு பஸ் ஒருவாறு வந்து சேர்ந்தபோது பின் புறப்பட முடியாதபடி ஸ்தம்பித்துவிட்டது. பஸ் சாரதியும் கண்டக்டரும் சிரமதான பிரியர்களான சில பிரயாணிகளும் செய்த பணியைத்தொடர்ந்து மீண்டும் பஸ் நகரத் தொடங்கியது. இத்தகை இடர்ப்பாடுகள் ஏற்பட்டதாலேயே 'கடுகதி' இந்தக் கதிக்குள்ளாகியது,

இந்த பஸ்ஸில் பிரயாணம் செய்த பிரயாணிகளில் அநேகமானோர் உத்தியோகஸ்தர்கள் எனத்தெரிகிறது.




### கொழும்பு

**திங்கள் 14 - 2 - 66**

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்
காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்
பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை,

344 மீற்றர் & 61 மீற்றர்
மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15படத்திலிருந்து.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 இசைக்கச்சேரி, 7-45 கலைஏடு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்தியஇசை, 9-30 தமிழ்மூலம் சிங்களம், 9-45 எங்கள்விருப்பம், 10-00 நேயர் விருப்பம்.

## வரிவிளம்பரம்

தண்ணீர்க் குழாய்கள் இணைக்கவும், பம்புகள்திருத்தவும், மோட்டார் றிவயின்டிங் மற்றும் மின்சார உபகரணங்கள் சிறந்தமுறையில் குறித்த நேரத்தில் திருத்திக் கொடுக்கப்படும். எம்முடன் நேரடியாக அல்லது கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். S. நாகேசு, ஜெகஜோதி தொழிற்சாலை, 41, பஸார் ஒழுங்கை, மும்ஸாக் கட்டிடம், யாழ்ப்பாணம். 1920

**விற்பனைக்கு**

மானிப்பாய் றோட் ஆறுகால்மடத்தில், 14 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பரப்பு ரூ 2000/- சிறந்த காணி, விபரங்களுக்கு மேற்படி விலாசத்திலுள்ள சி. சின்னத்துரையிடம் தொடர்புகொள்க. 1910

ஒலிபெருக்கி செற், புதிய Vortexion அம்பிளிபையர் உடன் கூடியது. இன்னும் வேறு பல உபகரணங்களும் உள்ளது. பார்வையிடவும். மோஹன்ஸ், மெயின்வீதி, சங்கானை. 1922

மின்சார வேலைசெய்யும் ஸ்தாபனம். தளபாடங்களும், மின்சார வயரிங் பொருட்களும் இருக்கின்றன. றேடியோ, கடிகாரம் திருத்துவதற்கும். புகைப்பட ஸ்ரூடியோ அமைப்பதற்கும் ஏற்ற நல்ல இடம். நேரில் விசாரிக்கவும்: மோஹன்ஸ், மெயின்வீதி, சங்கானை. 1923

**கல்வி**

பீ. ஏ; ஜீ. ஏ. கியூ; ஜீ.சீ.ஈ உயர்தரம் கலையியல் ஒரு வருடப் பயிற்சி, சாதாரணம் கலை/விஞ்ஞானம்; வர்த்தக வகுப்பு தமிழ்/ஆங்கிலம் சிங்களம்; ஜே. எஸ். சி. ஆகிய வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. சித்திஉறுதி! உடனே சேருங்கள். யாழ்ப்பாண டியூட்டோறியல் கல்லூரி, கைலாச பிள்ளையார் கோவிலடி, நல்லூர்-யாழ்ப்பாணம் கிளை: (நெல்லியடி இன்டஸ்ரியல் வேக்ஸ் முன்பாக) வதிரி-கரவெட்டி. 1901

**காணவில்லை**

11-ம் திகதி வெள்ளிக்கிழமை, காலை 10-30 மணியளவில் அச்சுவேலி பஸ்நிலையத்திற்கும் பருத்தித்துறைக்கும் இடையில் பஸ்ஸில் பிரயாணம் செய்யும்போது, ஒரு பர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் 'ஈழநாடு' காரியாலயத்தில் சேர்ப்பிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## புதிய நிர்வாகிகள்

உடுப்பிட்டி, ஞாயிறு

நெல்லியடி வர்த்தகர் சங்க நடப்புவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் க. ஞானசுப்பிரமணியம், உபதலைவர் வி தம்பிப்பிள்ளை செயலாளர் ஆர் குலசேகரம்பிள்ளை, வி சிவசோதி, உபசெயலாளர் செ சுப்பிரமணியம், தனாதிகாரி: க சிதம்பரன். 7 பேர் கொண்ட நிர்வாக சபைக் குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோனேஷிய சதி விசாரணை இன்று ஆரம்பம்

## முதலாவது எதிரி சார்பில் பெண் வழக்கறிஞர் ஆஜராவார்

ஜாகர்த்தா, பெப். 13

சென்ற வருடம் அக்டோபர் மாதத்தில் இந்தோனேஷியாவில் தோல்வியில் முடிவடைந்த சதிக்குத் தலைமை தாங்கியதாகச் சந்தேகிக்கப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருப்பவர் சார்பில் ஒரு பெண் வழக்கறிஞர் ஆஜராகவிருக்கிறார்.

பெண் வழக்கறிஞரான திருமதி டியன் சுனீட்டோ கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்.

காவலில் வைக்கப்பட்டிருக்கும் கேர்ணல் யண்டங் அக்டோபர் 14-ம் திகதி மத்திய ஜாவாவில் கைது செய்யப்பட்டார்.

ராணுவ நீதிமன்ற விசாரணை நாளை ஆரம்பமாகும்.

# அட்டகாசம் செய்தமாணவர் அமைதியையும் நிலைநாட்டினர்

பாட்னா, பெப்.13

மத்திய பாட்னாவிலுள்ள பஸ் டிபோவில், பஸ் கூட்டுஸ்தாபன அதிகாரிகளுக்கும் மாணவர்களுக்கு மிடையே ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பில் ஏற்பட்டதைத் தொடர்ந்து இரண்டு பஸ் வண்டிகளை மாணவர் கோஷ்டியொன்று தீவைத்து நாசமாக்கியது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட பீதிகாரணமாக கடைக்காரர்கள் கடைகளை மூடினர்; வாகனங்கள் அங்குமிங்கும் விரைந்து ஓடின, மக்கள் பாதுகாப்பான இடங்களைநோக்கி ஓடினர்.

பொலிஸார் விரைந்து வந்து நிலைமையைச் சமாளித்தனர். பஸ்களில்பற்றிய தீயைஅணைப்பதில்மாணவர்களும் பொலிஸாருக்கு உதவிசெய்தனர். அமைதியை நிலைநாட்டுவதிலும் மாணவர்கள் உதவிபுரிந்தனர்.

## திரும்பிவந்தது!

மீசாலை, ஞாயிறு

சுண்டிக்குளியிலுள்ள ஒருவர் சுழிபுரத்திலுள்ள நண்பர் ஒருவருக்கு தெளிவாக விலாசமெழுதி கடிதம் அனுப்பியிருந்தார். அக்கடிதத்தின் பின்பக்கத்தில் தமது விலாசத்தையும் எழுதியிழுந்தார். அக்கடிதம் குறிப்பிட்ட தமது நண்பருக்குக் கிடைத்திருக்குமென ஆறுதல் கொண்டிருந்தபோது முதல்நாள் அனுப்பிய கடிதம் மறுநாள் காலை (அனுப்பியவருக்கேதிரும்பி) வந்து சேர்ந்ததாம்.

## கல்யாண பயம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுபற்றி திருவாளர் அண்டோனியோவிடம் கேட்டபோது தாம் திருமணத்தைப்பற்றி சிறிது அச்சம் கொண்டதாகவும் பின்னர் எல்லாம் சரியாகிவிட்டதாகவும் தெரிவித்தார்.

## ஈழநாடு சிறுகதை,க விதை போட்டி

### முடிவு திகதி ஒருவாரம் நீடிப்பு

யாழ்ப்பாணம் இரத்த தானச் சங்கத்தின் ஆதரவில் சென்ற மாதம் 28-ந் திகதி ஈழநாடு வாரமலர் ஆரம்பித்த சிறுகதை, கவிதைப் போட்டியின் முடிவு திகதியை மேலும் சில தினங்களுக்கு நீடிக்க வேண்டுமெனப் பலர் விரும்பி விடுத்தவேண்டுகோளுக்கிணங்க, 12-2-66 திகதி முடிவடையவிருந்த போட்டி 19-2-66 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

போட்டி முடிவு 19-2-1966

## பிரிவுபசாரம்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

''ஊக்கம் தான் மனிதனை உயர்ந்தவன் ஆக்குகிறது. ஊக்கம் இல்லாவிட்டால் மனித சமுதாயம் இன்று இவ்வளவு முன்னேற்றமான நிலையை அடைந்திருக்கமுடியாது அதேபோல் ஆசிரியர் திரு. சு. நாகராசாவும் இதே கல்லூரியில் கல்வி கற்று, ஆசிரியராகக்கடமையாற்றி இதே கல்லூரியின் மூலம் விசேடபயிற்சிபெறச் செல்வது அன்னாரின் அயராத ஊக்கத்தினால்தான் என்பதனை எவரும் மறுக்க முடியாது.''

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. சு. நாகராசா விசேட பயிற்சிக்காகச்செல்வதை முன்னிட்டு மேற்படி கல்லூரி ஆசிரியர்களால் அவருக்கு நடத்தப்பட்ட பிரிவுபசாரக் கூட்டத்துக்குத் தலைமைவகித்துப் பேசிய கல்லூரி அதிபர் திரு. நா. வேலுப்பிள்ளை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

உடனுசிரியர்கள் பலரும் திரு. சு. நாகராசாவின் திறமையைப் பாராட்டிப் பேசினர். திரு. சு. நாகராசா இறுதியாக நன்றி தெரிவித்துப் பேசினர்.

## சீனு மீது காஸ்ட்ரோ தாக்கு

ஹவானா, பெப். 13

கியூபா பிரதமர் பிடல் காஸ்ட்ரோசீனுமீது கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளார்.

சீனு, கியூபா மீது ஆதிக்கம்செய்ய எண்ணுவதாக அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

கியூபாவின் இராணுவத்தை, அரசாங்கத்துக்கு எதிராகத் தூண்டும் முயற்சியில் சீனு ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# கேரளம்: அரிசி ரேஷனை 160 கிராமாக உயர்த்த முடிவு

## ராஜீய முதன்மந்திரிகள் மகாநாட்டில் தீர்மானம்

புதுடில்லி, பெப். 13

கேரள ராஜ்யத்தில் அரிசி ரேஷன் அளவை மீண்டும் 160 கிராமாகக் கொண்டு வருவதென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இன்று புதுடில்லியில்நடைபெற்ற ராஜ்ய முதன் மந்திரிகள் மகாநாட்டில் கேரள உணவு நிலைமை குறித்து விவாதிக்கப்பட்டது. அடுத்தமாதம் மூன்ருவதுவாரத்திலிருந்து உணவு ரேஷனை 160 கிராமாக உயர்த்துதென்று இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி பேசுகையில், இந்தியாவின்உணவு நிலைமை குறித்து மக்களிடையே விபரமாக விளக்கினுல் அவர்களின் ஆதரவு நிச்சயம் கிடைக்கும் என்று கூறினுர்.

நாட்டின் சில பகுதிகளில் ஏற்பட்டிருக்கும் உணவு நெருக்கடியைத் தீர்ப்பதற்காக நாட்டின் சகல மக்களும் சிறிதளவு தியாகம் செய்யவேண்டுமென்றும்பிரதமர் இந்திரா கேட்டுக்கொண்டார்.

## வேலைநிறுத்தமும் மறியலும்

திருவனந்தபுரம், பெப் 13

கேரளத்தில் ரேஷனுக்கு பன்னிரண்டு அவுன்ஸ் பெறுவதற்காகவும் உணவுப் பற்றுக்குறையை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தவர்களை விடுதலை செய்யக்கோரியும் அவர்களின்மீதுள்ள வழக்கைவாபஸ் பெறக்கோரியும் இம்மாதம் 25-ந் திகதி கேரளம் முழுவதிலும் ஒருநாள் வேலைநிறுத்தம் செய்யவேண்டுமெனக் கோரி உணவு பற்றுக்குறை எதிர்ப்புக் கிளர்ச்சிசெய்யும் இடதுசாரிக்குழுவான 'சமாரசமிதி' வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரசாங்க காரியாலயங்களின் முன்னும் கலெக்டர் காரியாலயங்களின் முன்னும் மறியல் இயக்கமும் இம்மாதம் 25-ந் திகதி ஆரம்பமாகவிருக்கின்றன.

## ஐ. நா.வுக்கு செல்ல உபகாரச் சம்பளம்

நியூயோர்க், பெப் 13

வரும் செப்டம்பர் மாதம் ஆரம்பமாகும் ஐ. நா. சபைக் கூட்டத்தைப் பார்வையிடுவதற்கு தெரிவுசெய்யப்படும் ஒரு எழுத்தாளருக்கு உபகாரச் சம்பளம் வழங்க ஐ நா. நிருபர்கள் சங்கம் உத்தேசித்துள்ளது.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலிருந்து இந்த எழுத்தாளர் தெரிவுசெய்யப்படுவார். 25க்கும் 35க்கு மிடையிலான வயதையுடையவர்களே இதற்குவிண்ணப்பிக்கலாம்.

தெரிந்தெடுக்கப்படுபவர் நியுயோர்க்குக்கு சென்று திரும்புச் செலவைச் சங்கம் ஏற்றுக்கொள்ளும். அத்தோடு 3 மாதகாலம் அங்கு தங்கும் வாய்ப்பைப் பெறுவார்.

## கரபந்தாட்டம்

காங்கேசன்துறை, திங்.

காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினருக்கும் காங்கேசன்துறை அபிவிருத்தி விளையாட்டுக் கழகத்தினருக்குமிடையில் அபிவிருத்திக் கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் காங்கேசன்துறை அபிவிருத்திக் கழகத்தினர் இறுதி இரண்டாட் டங்களிலும் முறையே 15-10, 15-12 புள்ளிகளால் வெற்றியீட்டினர்.

காங்கேசன்துறை அபிவிருத்திக் கழகத்தினரின் இரண்டாவது வருடாந்தச் சுற்றுப்போட்டிக்காக இவ்வாட்டம் நிகழ்ந்தது. விளையாட்டு இறுதி நேரத்தில் ரசிக்கும்படி அமைந்திருந்தது. காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சி. நடராசா, வ. முருகேசு ஆகியோரும் அபிவிருத்திக் கழகத்தைச் சேர்ந்த சி. செல்வரத்தினமும் திறமையாக விளையாடி ரசிகர்களின் பாராட்டைப் பெற்றனர்.

# "வியட்காங் தாக்குதல் நிறுத்தப்பட்டு விட்டது"

## அமெரிக்க உபஜனுதிபதி ஹம்ப்ரி கூற்று

சைகோன், பெப். 13

அமெரிக்க 7-ம் கடற்படையைச் சேர்ந்த விமானங்கள் இன்று வடவியட்னுமில் மிகக் கடுமையான தாக்குதல் நடத்தி பிரதான விமானத்தளம் ஒன்றையும், தபால் போக்குவரத்து நிலையங்களையும் அழித்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

இங்கு வந்திருக்கும் அமெரிக்க உபஜனுதிபதி ஹம்ப்ரி, வியட்னுமில் யுத்தத்தில் வெற்றிபெறுவது மட்டும் அமெரிக்காவின் கொ கை அல்லவென்றும், வறு மை, அறியாமை, அநீதி, [illegible]ோய் ஆகியவற்றை எதிர்த்துப் போராடுவதும் அமெரிக்காவின் கொள்கை என்றும் கூறினுர்.

இந்த இரு லட்சியங்களிலும் அமெரிக்கா வெற்றி பெறும் என்றும் அவர் கூறினுர்.

''தற்போது அமெரிக்காவும், அதன் நண்பர்களும் யுத்தத்தில் வெற்றிபெற ஆரம்பித்துவிட்டார்கள். வியட்காங் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டுவிட்டது'' என்றும் அவர் நிருபர்களிடம் கூறினுர்.

## இடைத்தேர்தல்

யாழ்ப்பாணம், திங்கள்

நெடுந்திவு கிராமசபையின் பத்தாம் வட்டாரத்துக்கான இடைத்தேர்தலுக்கு மூவர் நியமனப்பத்திரங்கள் சமர்ப்பித்துள்ளனர். இவ்வட்டார இடைத்தேர்தலில் திருவாளர்கள் நடராசா விசுவலிங்கம் ஞானமுத்து ஜோசப். விசுவநாதர் சுப்பிரமணியம் ஆகியோர் போட்டியிடுகிறார்கள்.

சாவகச்சேரி நகரசபை எட்டாம் வட்டாரத்துக்கான இடைத்தேர்தலில் திரு. மயில்வாகனம் வேலாயுதம் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார்.

## சிரமதான இயக்கத்தில் 2000 தொண்டர்கள்

வவனியா, ஞாயிறு

''ஆண்களும் பெண்களும் மாணவர்களுமாக ஏராளமானவர்கள் கூடி ஒரே குரலில் கோஷ்டியாக இயங்கி ஒரு மைல் வீதியை மண்வெட்டி, கூடை கையில் ஏந்தி, சிரமதான முறையில் அமைப்பது சரித்திரத்தில் முக்கியமான விஷயமாகும். உங்களை எவ்வளவு பாராட்டினுலும் தகும்'' என்று கரைச்சி கிராமசபைத் தலைவர் திரு. வீ. ஆனந்தசங்கரி சுமார் 2000 தொண்டர்கள் மத்தியில் புளியம்பொக்கனை நாகதம்பிரான் கோவிலுக்குச் செல்லும் பகிரங்க பாஸ்தாவை சிரமதானமுறையில் வேலை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் கூறினுர்.

சிரமதான வைபவத்துக்கு குத்துவிளக்கேற்றி தலைமை வகித்து உரையாற்றிய கரைச்சிபகுதிக் காரியாதிகாரி திரு. செ. ஈ. புள்ளைநாயகம் கூறியதாவது:-

''தொற்றுநோய் போல காட்டுத்தீபோல் இவ்வியக்கம் நாட்டின் பல்வேறு பாகத்திலும் பரவுமானல் அரசாங்கத்திற்கு பல்லாயிரக்கணக்கான நிதி மிஞ்சுவது மாத்திரமல்ல, நாடே சுவர்க்கமாக மாறிவிடும். சிரமதான இயக்க மூலம் அமைக்கப்படும் வீதிகள், தெருக்கள், பாடசாலைகள் ஸ்திரமானதாகவும் வேலைதுப்புரவாகவும் இருக்கும்.''

சிரமதான இயக்கத்தலைவர் திரு. சி. சு. சின்னத்தம்பி மலர்மாலை சூட்டி இரு பிரமுகர்களையும் வரவேற்ருர்.

சிரமதான இயக்குநரும் கலவெட்டித்திடல் காந்தி சேவாசங்கத் தலைவருமான திரு. ஆர். ரி. சுப்பிரமணியம் பேசுகையில் கூறியதாவது:

''சாதி, மத பேதமின்றி வறிஞர், செல்வந்தர் என்ற பிரிவற்று யாவராலும் எத்திறத்தவராலும் இலகுவிற் செய்யக்கூடிய தருமப்பணி சிரமதானமாகும். சிவன் கோயிலை நோக்கி சிரமதானத் தெரு செல்வதால் இச்சிரமப்பணி சிவப்பணியாகவும் அமைந்துவிட்டது. இச்சிரமதானிகள் யாவரும் நிரந்தரமான நன்மையைச் செய்த பேற்றைப் பெறுவர்.

நவீன வீட்டுத் தளபாடங்களுக்கு பாஷன் பேணிசிங் பலெஸ் 5, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.